புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol: 08, Issue : Special
March 2025
ISSN: 2456-821X
SACRED HEART COLLEGE (AUTONOMOUS)
Tirupattur - 635 601
Tamil Nadu, India.
SACRED HEART RESEARCH PUBLICATIONS

# 4. TML1143 - திருவாசகத்தில் மாணிக்கவாசகரின் பக்திநெறியும் மகளிர் விளையாட்டுகளும்

முனைவர் மு.ஹேமலதா
உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை, வேளாளர் மகளிர் கல்லூரி (தன்னாட்சி),
ஈரோடு – 12.

## முன்னுரை

*மாணிக்கவாசகரால் அருளப்பட்ட திருவாசகம் சைவ திருமுறைகளில் எட்டாவது திருமுறையாக விளங்குகிறது. திருவாசகம் உள்ளத்தையும் உயிரையும் உருக்கக் கூடியது. திருவாசகத்திற்கு உருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார் என்பது பழமொழி.*

*செந்தமிழின் அன்பு மறையாய் போற்றப்படும் திருவாசகத்தைப் பற்றி நாராயண வேலுப்பிள்ளை "திருவாசகம் என்ற பெயர் திருவுடைய சொற்களால் ஆகிய அருள் நூல் எனப் பொருள்படும். திருவாசகத்தைத் தேன் எனக் கூறுதல் மரபு. தேன் உடற்பிணிக்கு மருந்தாதல் போல் இந்நூல் உயிர்ப்பிணிக்கு மருந்தாகும்"1 என்று கூறுகின்றார்.*

வான்கலந்த மாணிக்க வாசகநின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து செழுஞ்கனித் தீஞ்சுவை கலந்துதென்
ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே

(ஆளுடைய அடிகள்அருள்மாலை, இராமலிங்க சுவாமிகள்)

*இவ்வாறு இறைவனோடு இசைந்து இலங்கிய மாணிக்கவாசகரை வான்கலந்த மாணிக்கவாசகர் என்று வள்ளலார் போற்றிப் பாடுகின்றார். அந்த வான்கலந்த பெருமானின் அருள் கவிதைகளில் பெண்களுக்கென தனி இடத்தை கொடுத்து மகளிர் விளையாட்டின் மூலம் இறைவனைப் பக்தியோடு பாடிப் பாடி பரவிய தீஞ்சுவையை அறிவோம்.*

## மகளிர் விளையாட்டுகளும் பக்தியும்

ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி உவப்பிலா ஆனந்தமாய
தேனினைச் சொரிந்து புறம்புறம் திரிந்த செல்வமே சிவபெருமானே

*என்று மாணிக்கவாசகர் இறைவனைப் போற்றிப் பாடுவதை கேட்கும் பொழுது நம் மனம் உருகுகி அளவிலா ஆனந்த தேனிலே திளைக்கின்றோம். "வாழ்க்கையில் முற்படும் எத்தனையோ இன்னல்கள் நம்மை இடப்படுத்தாமல் இருக்கவேண்டுமானால் இன்னல்கள் நம்மை ஆட்டி வைக்காமல் இருக்க வேண்டுமானால் இறைமை ஞானம் என்ற ஒளி இளம் பருவத்திலேயே நம் இதயத்தில் ஏற்றப்பட வேண்டும்" 2*

*இன்பமாக வாழ வேண்டுமென்றால் இறைஞானம் நமக்கு வேண்டும். அதுவும் இளமைப் பருவத்திலேயே அந்த ஞானத்தை நாம் பெற வேண்டும். பாடங்களைப் படிப்பது என்பது சிறுவர்களின் மனதிற்கு சிறிது கசப்பாகவே இருக்கும். ஆகவே சிறார்கள் விரும்பி படிக்க வேண்டும் என்பதற்காக அவர்கள் விளையாடும் பல்வகை விளையாட்டுக்களோடு இறை ஞானத்தை இசைத்து இளம் உள்ளங்களில் ஞான ஒளியை ஏற்றுகின்றார் மாணிக்கவாசகர்.*

*இறைமை ஞானத்தை எளிமையாக்கி, இனிமையாக்கி இன் தமிழில் குழைத்து ஊட்டும் மாணிக்கவாசர்களின் அருள் உள்ளத்தை மகளிர் விளையாட்டு வெளிப்படுத்தும் சிறுமியர்கள் பாடும் அம்மானை, தெள்ளேணம், சாழல், உந்தி, தோள்நோக்கம், ஊஞ்சல் போன்ற விளையாட்டுப் பாடல்களின் மூலம் அறிய முடிகிறது.*

**மகளிர் விளையாட்டுகள்**

*சங்க காலம் முதல் இன்று வரை மகளிர் விளையாட்டுகள் பெரும்பாலானவை அகவிளையாட்டுகளாகவும் அறிவுத்திறன் சார்ந்தவையாகவும் உள்ளன. கிராமப்புறப் பெண்கள், குறிப்பாக இளவயதுப் பெண்கள் அதிகமாக வெளியிடங்களுக்குச் செல்வதில்லை. அவர்களுக்கு வீட்டுக் கண்காணிப்பும் சமுதாயக் கட்டுப்பாடும் மிகுதி. அதனால் வீட்டிற்குள்ளேயே ஆடும் விளையாட்டுகளில் ஈடுபடுகின்றனர். மகளிர் விளையாட்டுகள் அவர்கள் விரும்பிய நேரத்தில் எப்பொழுது வேண்டுமானாலும் ஆடிக்கொள்ளும் கட்டுப்பாடற்ற சுதந்திரத்தன்மை உடையவையாகவே உள்ளன. அவ்வாறு பெண்கள் விளையாடும் பொழுது, விளையாட்டோடு கலந்து இறைஞானத்தைப் பெற வேண்டும் என்று மாணிக்கவாசகர் பல பதிகங்களைப் பாடியுள்ளார்.*

*அன்பு, பரிவு, பாசம், பரவசம், சரணாகதி எனப் பக்தியின் ஒவ்வொரு நிலையையும் தமிழில் பக்தி இலக்கியமாக வடித்துள்ளனர் சமயச்சான்றோர்கள். அதில் பெண்களின் விளையாட்டும் விதிவிலக்கல்ல.*

**பக்தி வெளிப்படும் விளையாட்டுக்களம்**

*மாணிக்கவாசகர் 9 பகுதிகள் மகளிர் விளையாட்டினைக் கொண்டு பாடியுள்ளார். மூன்று பேர் காய் ஆடும் போது பாடும் பாடலாக அமைந்தது திருவம்மானை. திருக்கோயிலில் இறைவனது மெய்ப்பூச்சுக்குரிய பொன்னிறப் பொடி இடிக்கும் பெண்கள் பாடும் வரிப்பாட்டு அமைப்பில் அமைந்த திருப்பொற்சுண்ணம். கைகோர்த்து ஆடும் திருக்கோத்தும்பி. முறத்தில் தெள்ளி கொழித்து விளையாடும் திருத்தெள்ளேணம். வினாவிடை பாங்கில் வரும் திருச்சாழல். பூக்கொய்யும் பொழுது பாடும் திருப்பூவல்லி. உயர எழுந்து குதித்தாடும் திருவுந்திரயார். மகிழ்ச்சியால் பூரித்துதோள் நோக்கிகை வீசி விளையாடும் திருத்தோள் நோக்கம். ஊஞ்சல்பாட்டாகிய திருபொன்னூசல் போன்ற மகளிர் விளையாட்டு வகை பாடல்களைப் பதிகங்களாக அமைத்து சிவபெருமானின் கருணையினையும் அவரே முழுமுதற் கடவுள் என்பதனையும் இனிதாக விளக்குகின்றார்.*

**திருவம்மானை**

*அம்மானை என்பது பண்டை காலத்தில் தமிழ்நாட்டு மகளிர் விளையாடும் ஒரு வகை விளையாட்டாகும்.மூன்று பெண்கள் அமர்ந்து அம்மானைக்காயை வீசி விளையாடும் விளையாட்டு. "மகளிர் மூவர், ஏதோ ஒரு பொதுவான செய்தியையோ, அரசன் புகழையோ, இறைவன் அருளையோ பாடி அவர்களை அடைய வேண்டும் என்ற ஆசையோடு அம்மானைக்காயை வீசி விளையாடும் விளையாட்டே " அம்மானை " விளையாட்டாக அமைந்தது."(3) இது விளையாட்டாக இருந்தாலும், கவிதை புனையும் அறிவுப்பூர்வமான அமைப்புடையதாக இருந்ததால் இவ்விளையாட்டு இலக்கியவடிவம் பெற்றது.*

*அம்மானை ஆடுபவர்கள் தங்களுக்கு நல்ல கணவன் வாய்க்க வேண்டும் என்றும் பாடி ஆடுவர். அந்த முறையில் மாணிக்கவாசகர் சிவபெருமான் மீது வைத்திருந்த எல்லையற்ற காதலால் கசிந்துருக்கி அவரது திருவில் கலக்கின்ற திருமணத்தை எய்தும் பொருட்டு அம்மானை பாடி அருளினார். அது திரு என்னும் அடைமொழியை பெற்று திருவம்மானை என்று வழங்கப்பட்டது.*

''விண்ணாளும் தேவர்க்கும் மேலாய வேதியனை
மண்ணாளும் மன்னவர்க்கும் மாண்பாகி நின்றானைத்
தண்ணார் தமிழளிக்கும் தண்பாண்டி நாட்டானைப்
பெண்ணாளும் பாகனை பேணு பெருந்துறையில்
கண்ணார் கழல்காட்டி நாயேனை ஆட்கொண்ட
அண்ணாமலை யானைப் பாடுதுங்காண்அம்மானாய்'' திருவம்மானை . 10

*மாணிக்கவாசகர் அருளிச் செய்த அம்மானைப்பாட்டு திருவாசகத்தின் ஒரு பகுதியாக 'திருவம்மானை' என்று விளங்குகிறது. இது இறைவன் திருவருளைப் பெற வேண்டிப்பாடி, ஆடிய அம்மானையாதலால் 'திரு' என்று அடைமொழி கூட்டி திருவம்மானை எனப்பட்டது. இப்பாட்டு பலர்நின்று தத்தம் முறை வரும் போது ஒவ்வொரு கருத்தைப் பாடலாகப் பாடி ஆடும் முறையாக அமைந்திருக்கின்றது. எனவே இவ்விளையாட்டில் மூவர் என்ற வரையறையின்றி சூழ்நிலைக்கேற்ப எத்தனை பேர் வேண்டுமானாலும் ஆடலாமெனக் கொள்ளலாம். மாணிக்கவாசகர், அரசன், வள்ளல்களன்றி இறைவன் அருளை வேண்டி அம்மானையாகப் பாடியுள்ள முறை பிற்காலத்தில் சிற்றிலக்கியங்களாகப் பெரும்வளர்ச்சி அடைந்துள்ளது.*

**திருபொற்சுண்ணம்**

*பலவகையான மணம் மிக்க பொருட்களை உரலில் இட்டு இடிக்கப்படுவது பொற்சுண்ணமாகும். இது பொன் போன்ற நிறமுடையது. திருமஞ்சனத்துக்காக இதைப் பயன்படுத்துவர். சிவபெருமானின் திருபொழிவுக்கு வேண்டும் திருமஞ்சனபொடி அமைத்து பாடிக்கொண்டே இடிக்கப்படுவது திருபொற்சண்ணப் பாடலாகும். மாணிக்கவாசகர் திருவாசகத்தில் தில்லையில் பாடிய இறைவனுக்கு உகந்த திருமஞ்சனம் நம்முடைய அன்பு என்பதனைக் கூறுகின்றது பாடல்,*

வையகம் எல்லாம் உரலதாக மாமேருஎன்னும் உலக்கைநாட்டி
மெய்யெனும் மஞ்சள்நிறைய அட்டிமேதகுதென்னன் பெருந்துறையான்
செய்யதிருவடி பாடிப்பாடிச் செம்பொன் உலக்கை வலக்கைபற்றி
ஐயன்அணிதில்லை வாணனுக்கே ஆடப்பொற்சுண்ணம் இடித்துநாமே.

(திருவாசகம்– திருபொற்சுண்ணம். 9 )

**திருகோத்தும்பி**

*வண்டு வகையில் மிகப்பெரியதாய் இருப்பது கோத்தும்பியாகும். இது அரசவண்டு என்றும் அழைக்கப்படுகின்றது. பூவிலுள்ள நறுமணத்தையும் தேனையும் தும்பி விரும்புவது போன்று மனிதனாய் பிறந்திருப்பவன் சிவபெருமானையே நாடி இருக்கக் கடமைப்பட்டுள்ளான்.*

பூவேறு கோனும் புரந்தரனும் பொற்பமைந்த
நாவேறு செல்வியும் நாரணனும் நான்மறையும்
மாவேறு சோதியும் வானவருந்தா மறியாச்
சேவேறு சேவடிக்கே சென்றுதாய் கோத்தும்பீ.

(திருவாசகம்– திருக்கோத்தும்பி.1)

**திருதெள்ளேணம்**

*கைகொட்டிப் பாடிஆடும் மகளிர் விளையாட்டு தெள்ளேணம். ஆண்டவன் கருணையினால் அன்பர்களைக் கலந்தாட் கொண்டு விட்டால் தம்மை இறைவனுக்கு அன்னியமாக நினைக்கும் நினைவு நீங்கிவிடும். உலகபற்றுகள் எல்லாம் ஒளிந்து விடும். ஆனந்தப் பரவசத்தினால் இறைவனை அடையும் வாய்ப்புகிட்டும். ஒரு நாமம் ஓர் உருவம் என்று ஏதும் இல்லாத இறைவனுக்கு நாம் ஆயிரம் திருநாமங்களை யிட்டுப் பாடுகின்றோம் என்ற தெள்ளிய ஞானத்தைப் பாடி தெள்ளேணம் ஆடுகின்றனர் மங்கையர்கள்.*

திருமாலும் பன்றியாய்ச் சென்றுணராத் திருவடியை
உருநாம் அறியவோர் அந்தணனாய் ஆண்டுகொண்டான்
ஒருநாமம் ஒருருவம் ஒன்றுமில்லாற் காயிரந்
திருநாமம் பாடிநாம் தெள்ளேணங் கொட்டாமோ.

(திருவாசகம்– திருதெள்ளேணம்.1)

**திருச்சாழல்**

*சாழல் என்பது ஒரு வகையான மகளிர் விளையாட்டு. தடையும் தடைக்கு ஏற்ற விடையும் பாடுவத சாழலில் இடம்பெறுகிறது. பௌத்தர்கள் சைவத்திற்கு தடை செய்தார்கள் என்பதும் ஊமையாய் இருந்த பௌத்த அரசகுமாரி அத் தடைகளுக்கு விடை சொன்னாள் என்பதும் வரலாறு.*

*புத்த குருமார்கள் சிலர் முன்பொரு காலத்தில் தில்லைக்கு வந்தனர். அவர்களுடன் ஈழ நாட்டு மன்னனும் தன் அருமை மகளுடன் வந்தான். அந்தப் பெண் பிறவியிலேயே ஊமை. புத்தர்கள் சைவர்களுடன் வழக்கிட்டு தன்கொள்கைகளை நிலைநாட்ட முயன்றனர். மாணிக்கவாசகர் அவர்களுடன் வழக்கிட்டு வென்றார். பௌத்தர்கள் தங்கள் தோல்வியைக் கண்டு மனம் புழுங்கி முறையில்லாமல் உரையாடத் தொடங்கினர். மாணிக்கவாசகர் அவர்களை ஊமையாக்கினார். பின்னர் அவர்கள் உண்மை யினை உணர்ந்து சைவசமயத்தினை தழுவினர். ஈழநாட்டு மன்னனின் மகளை மாணிக்கவாசகர் பேச வைத்தார். அச்சமயத்தில் பாடிய பதிகம் தான் திருச்சாழல் .*

பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதும் திருவாயால் மறைபோலுங் காணேடீ?
பூசுவதும் பேசுவதும் பூண்பதுவுங் கொண்டடென்னை
ஈசனவன் எவ்வுயிர்க்கும் இயல்பானான் சாழலோ!

திருவாசகம் – திருச்சாழல்.1

**திருப்பூவல்லி**

*இறைவனை எண்ணிக்கொண்டு பூம்பொழிலில் பெண்கள் பூ கொய்வதனைக் கண்ட மாணிக்கவாசகர் திருப்பூவல்லி என்ற பதிகத்தை அருளினார்.*

*தாயின் பெரிதும் தயாவுடைய நம் பெருமானை நினைத்துக் கொண்டு, பெண்கள் மல்லிகை, முல்லை போன்ற மலர்களைப் பறித்துக் கொண்டே மகேசனின் புகழ்ப் பாடி பரவுகின்றனர். ஈசன் அவனை சிந்தையில் நினைத்த உடனே அத்தனையும் துறந்து விட்டேன். ஆகவே அவன் புகழ்ப் பாடி மலர்களைக் கொய்வோமாக என்று பெண்கள் பாடி பரவுவதை,*

இணையார் திருவடிஎன் தலைமேல் வைத்தலுமே
துணையான சுற்றங்கள் அத்தனையும் துறந்தொழிந்தேன்
அணையார் புனற்றில்லை அம்பலத்தே ஆடுகின்ற
புணையாளன் சீர்பாடிப் பூவல்லிகொய்யாமோ. திருவாசகம் –திருப்பூவல்லி .1

*என்ற பாடலில் அருளியுள்ளார் மாணிக்கவாசகர்.*

**திருவுந்தியார்**

*பெண்கள் அம்மானை, பூப்பந்து விளையாடுதல், ஊஞ்சலாடுதல் போன்றவற்றை விளையாடியதாக நாம் இலக்கியங்களிலிருந்து அறிகிறோம். அதுபோல ஒன்றுதான் உந்திபறத்தல் என்பது. அதில் பெண்கள் எம்பிக் குதித்து, தலைவனின் சிறப்புகளைப் பாடி விளையாடுவரானக் கூறுவர்.*

*திருவாசகத்தில் மாணிக்கவாசகர், திருஉந்தியார் எனும் தலைப்பில், சிவபெருமானின் சிறப்புகளைப்பாடி, மகளிராடுவதாக ஒரு பதிகம் பாடியுள்ளார்.*

வளைந்தது வில்லு விளைந்தது பூசல்
உளைந்தன முப்புரம் உந்தீபற!
ஒருங்குடன் வெந்தவாறுந் தீபற! (திருவாசகம் –திருவுந்தியார். 1)

*எனத்தொடங்கும் பாட்டில் சிவபெருமான் முப்புரம் எரித்த திருவிளையாடலைச் சொல்லிப்பாடுகின்றனர். தக்கன் வேள்வியை அழித்ததைப் பற்றி,*

தக்கனாரன்றே தலையிழந்தார்தக்கன்
மக்களைச் சூழநின்றுந்தீபற!
மடிந்தது வேள்வியென்றுந் தீபற! (திருவாசகம் –திருவுந்தியார்.16)

*எனக்கூறி, சிவபெருமானைப் பிழைத்தவர் உய்யமாட்டார் எனப்பாடி ஆடுவதாக பாடுகிறார். ராவணன் அகந்தையை அழித்தது பற்றியும், முனிவர்களைக் காத்தருளும் பேரருளாளன் சிவபெருமான் என்றும் பாடியுள்ளார் மாணிக்கவாசகர்.*

**திருத்தோள் நோக்கம்**

*மகளிர் ஒருவர் தோளை ஒருவர் அன்போடு நோக்கி தொட்டும் தட்டியும் அகம் மகிழ்ந்து ஆடும் விளையாட்டு திருத்தோள் நோக்கமாகும்.*

"காமனு டலுயிர் காலன்பற் காய்கதிரோன்
நாமகள் நாசிசிரம் பிரமன்கரம் எரியைச்
சோமன் கலை தலைதக்கனையும் எச்சனையுந்
தூய்மைகள் செய்தவா தோணோக்கம் ஆடாமோ." (திருவாசகம் – திருத்தோள் நோக்கம்.11)

*இப்பாடலில் இவ்வுலகில் இருப்பவர்கள் எல்லோரும் சிவபெருமானோடு எந்த விதத்தில் தொடர்பு கொண்டாலும் தூய்மை அடைவார்கள் என்ற கருத்து விளக்கப்படுகிறது.*

**திருப்பொன்னூசல்**

*பொன்பலகையால் ஊசல் செய்து ஆடப்படும் ஊசல் பொன்னூசல் ஆகும். பொன்னூசல் ஆடும்போது கிடைக்கின்ற இன்பத்தை போல மாணிக்கவாசகர் பாடிய திருப்பொன்னூசல் பதிகம் பாடி துதித்தால் பேரின்பம் கிடைக்கும். குழந்தைப் பேறில்லாதவர்கள் திருவாசகம் முற்றோதல் நிகழ்வில் இந்த பொன்னூசல் பதிகத்தைப் பாடி சிவபெருமானிடம் குழந்தை வரம் கேட்பார்கள்.*

"சீரார் பவளங்கால் முத்தங் கயிறாக
ஏராரும் பொற்பலகை ஏறி இனிதமர்ந்து
நாராயணன் அறியா நாண்மலர்த்தாள் நாயடியேற்கு
ஊராகத் தந்தருளும் உத்தரகோச மங்கை
ஆரா அமுதின் அருள்தாளிணைப் பாடிப்
போரார் வேற்கண் மடவீர் பொன்னூசல் ஆடாமோ" (திருவாசகம் – திருப்பொன்னூசல்.1)

*நீண்ட மணி மாடங்கள் நிலவுகின்ற திரு உத்தரகோச மங்கையிலிருக்கும் இறைவனின் பூரணஞானத்தைப் பொலிவுறப் பாடிப் பொன்னூசல் ஆடுகின்றனர் பூமடந்தையர்கள்.*

**முடிவுரை**

*அம்மையே அப்பா ஒப்பிலா மணியே அன்பினுள் விளைந்த ஆறமுதே என்று நாம் இதயம் கசிந்து இன்பம் பெருக இறையருளை வேண்டி நிற்கின்றோம். இறைவனும் அதற்கு இசைந்து இணையில்லாத இன்பத்தைத் தருகின்றான். அன்பு நெறியால் அகம் நெகிழ்ந்து, ஆனந்தம் பெற்று, ஆணவம் அகற்றி*

*ஆண்டவனின் அருளால் ஆட்கொள்ளப்படுகின்றோம். இந்த அன்பு நெறி என்ற பக்தி நெறியை மாணிக்கவாசகர் பெண்கள் விளையாடுகின்ற விளையாடல்களோடு இணைத்து அழகாக ஒன்பது பகுதிகளில் பாடி அருளியுள்ளார். அந்த ஒன்பது பகுதிகளையும் நாம் உள்ளம் உருக பாடி இறையருளைப் பெற்று பயனடைவோம். உருகாத நெஞ்சையும் உருகச் செய்யும் திருவாசகத்தைப் பாடி இறைவனின் திருவருளைப் பெற்றிடுவோம்.*

### அடிக்குறிப்புகள்

1. வித்துவான் நாராயணவேலுப் பிள்ளை,திருவாசகமும் திருவாய்மொழியும், பக்கம்.33)
2. மா.சண்முகசுப்பிரமணியம், திருவாசகத் தேனமுதம், பக்கம்.190).

### ஆய்வுக் கட்டுரை எழுத துணை நின்ற நூல்கள்


1. மாணிக்கவாசகர் திருவாசகம், திருமகள் நிலையம், தி.நகர், சென்னை – 17.
2. வித்துவான் நாராயண வேலுப்பிள்ளை, திருவாசகமும் திருவாய்மொழியும்,சரசு பதிப்பகம், சென்னை – 18
3. மா.சண்முகசுப்பிரமணியம், திருவாசகத் தேனமுதம் – திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்பு கழகம், சென்னை – 108.
4. இராமலிங்க சுவாமிகள், ஆளுடைய அருள் மாலை.